EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

**படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம்**

ஒண்டாரியோ அரசின் படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம் (Literacy and Basic Skills Program - LBS), மேலுமதிக படிப்பு அல்லது பயிற்சி, வேலைவாய்ப்பு அல்லது அதிகரிக்கப்பட்ட சுயாதீனம் போன்றவை தொடர்பான இலக்குகளை அடைய, படிப்பறிவு,எண்ணறிவு மற்றும் அத்தியாவசிய திறன்களுக்கான சேவைகளை தனிநபர்களுக்கு வழங்கி உதவுகிறது.

**என்ன சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன?**

படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம் படிப்பவர்களுக்கு இலவசமாக தரப்படுகிறது அத்தோடு ஒண்டாரியோ பாடத்திட்டத்தின் 9ஆம் வகுப்பு தரத்திற்கு குறைவான வாசிப்பு,எழுத்தறிவு,எண்ணறிவு மற்றும் அத்தியாவசிய திறன்கள் கொண்ட நபர்களிடம் கவனம் செலுத்துகிறது. உள்ளூர் பாடசாலை சபைகள், சமூகம் சார்ந்த ஏஜன்சிகள் மற்றும் பிரயோக கலைகள், தொழில்நுட்பத்திற்கான கல்லூரிகள் ஆகியவற்றினூடாக இந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

ஆட்கள் தங்கள் மேம்பாட்டுக்கான இலக்குகளை தெளிவாக்கவும் அவற்றை அடைவதற்கான ஒரு திட்டத்தை தீட்டவும் ஆதரவை பெறுவார்கள். பயிற்சி பல்வேறு முறைகளில் கிடைக்கப்பெறும் – தனித்தனியாக ஆசிரியர்கள் மூலம், சிறிய குழுக்களிள் அல்லது வகுப்பறைகளில்.

ஒருவர் தொழில்நுட்ப திறமைகளை பெற்றுகொள்ள விரும்பினால், இந்த பயிற்சி, கம்பியூட்டர் பாவனையையும் உட்படுத்தக்கூடும். ஆட்கள் கல்லூரி சார்ந்த போஸ்ட்-செக்கன்டரி படிப்பு மற்றும் பயிற்சிதிட்டங்கள் (அப்ரெண்டிஷிப் / வேலை பழகுதல் போன்றவை) ஆகியவற்றில் பிரவேசிக்க உதவும் தேவையான திறமைகளை வளர்க்க, படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம், கல்லூரிகளூடாக அறிவை உயர்த்தும் (அகடமிக் அப்கிரேடிங்) சேவைகளையும் வழங்குகிறது.

**யார் பங்குகொள்ள முடியும்?**

படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம் பாடசாலையில் இல்லாதவர்களாய் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சில் தொடர்புகொள்ளகூடியவர்களுக்கு கிடைக்கிறது. ஒண்டாரியோ வேர்க்ஸ் (Ontario Works) மூலமாக சமூக உதவி (சோஷல் அசிஸ்டன்ஸ்) பெறுபவர்களுக்கு விஷேசமான கவனிப்பு அளிக்கப்படும்.

பல்வேறுபட்ட மொழி மற்றும் கலாச்சார பின்னணியுடையவர்களின் படிப்பறிவு தேவைகள் நிறைவேற்றப்படுவதை நிச்சயப்படுத்த, படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம், ஆங்கிலம் அல்லது பிரெஞ்சை முதல்மொழியாக பேசுபவர்கள், காது கேளாதவர்கள் மற்றும் சுதேசிகள் ஆகியோருக்கான திட்டங்களை ஆதரிக்கிறது.

**இந்தச் சேவைகளை நான் எவ்வாறு பெற்றுகொள்ள முடியும்?**

படிப்பறிவு மற்றும் அடிப்படை திறமைகளுக்கான திட்டம் 200க்கும் அதிகமான ஏ ஜன்சிகள் மூலம் மாகாணம் முழுவதிலும் கிட்டதட்ட 300 இடங்களில் வழங்கப்படுகிறது.

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X